19 SEP 2001
சென்னை-6

<u>சுருக்கம்</u>

**ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் - சிறுபான்மையல்லாதோரால் நடத்தப்படும் உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் - மாணவர் சேர்க்கை - 2001-2002ஆம் கல்வியாண்டிலிருந்து ஒற்றைச் சாளர முறை அமுல்படுத்துவது - நிர்வாக ஒதுக்கீடு அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.**

---

<u>பள்ளிக் கல்வி (யு1)த் துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 153</u>

<u>நாள் 19.9.2001.</u>

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 110, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.
2. அரசாணை (நிலை) எண். 112, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.
3. தமிழ் நாடு சிறுபான்மையல்லாத உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் கூட்டமைப்பின் விண்ணப்பம் நாள் 11.8.2001.

---

<u>ஆணை</u>

தமிழ் நாட்டில், சிறுபான்மையல்லாதோரால் நடத்தப்படும் ஏழு உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (Non-Minority Aided Private Teacher Training Institutes) மாணவர்கள் சேர்க்கையானது அந்தந்த நிறுவனங்களால் இனவாரி இட ஒதுக்கீடு மற்றும் சிறப்பு இட ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு இதுவரை செய்யப்பட்டு வந்தது. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, 2001-2002-ஆம் கல்வியாண்டு முதல் சிறுபான்மையல்லாதோரால் நடத்தப்படும் உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கையில் அனைத்து இடங்களையும் + 2 மதிப்பெண் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில், இனவாரி இட ஒதுக்கீடு மற்றும் சிறப்பு இட ஒதுக்கீடு ஆகியவற்றிற்கு உட்பட்டு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரால் நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண். 110, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001ல் ஆணையிடப்பட்டது.

2. தற்போது தமிழ் நாடு சிறுபான்மையல்லாத உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் கூட்டமைப்பானது, தங்களின் நிறுவனங்களை நீண்ட நெடுங்காலமாக நடத்தி வருவதாகவும், மேற்குறிப்பிட்ட ஆணையினால் ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்களுக்கான வாய்ப்புகள் குறைவதாகவும் தெரிவித்து தற்போது மாணவர் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கையை 40லிருந்து 100 ஆக உயர்த்தவும், அதில் 50% இடங்களை நிர்வாக ஒதுக்கீடாக அளித்து பெரும்பான்மையினத்தின் சமூக நீதியை நிலை நிறுத்துப்படி படிக்கப்பட்டவை 3ல் கண்டுள்ள விண்ணப்பத்தில் கேட்டுள்ளனர்.

3. சிறுபான்மையல்லாத உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் கூட்டமைப்பின் மேற்குறிப்பிட்ட கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து தற்போது சிறுபான்மையல்லாதோரால் நடத்தப்பட்டு வரும் ஏழு உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கை இடங்களை 40 லிருந்து 80-ஆக உயர்த்தி அவற்றில் 40% இடங்களை 2001-2002ஆம் கல்வியாண்டு முதல் நிர்வாக ஒதுக்கீட்டில் அந்தந்த ஆசிரியர்

பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த பள்ளிகளில் பயின்ற அநாதை, ஆதரவற்ற ஏழை, எளிய மாணவர்களையும், சமுதாயத்தில் கிராமப்புறத்தில் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய மாணவர்களையும் கொண்டு, கூடிய அளவுக்கு அந்தந்த நிர்வாகமே நிரப்பவும், மீதி 50% இடங்களை ஒற்றைச் சாளர முறையில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரால் நிரப்பவும் ஆணையிடுகிறது. மேற்படி நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் கல்வித் தகுதி, வயது வரம்பு ஆகியவைகளுக்கு உட்பட்டு மாணவர் சேர்க்கை செய்யப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

4. மேற்குறிப்பிட்டுள்ள ஏழு நிறுவனங்களில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கையை 40லிருந்து 80-ஆக உயர்த்துவதற்கான விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்திடமிருந்து பெற்று அரசின் ' தடையின்மைச் சான்றுடன்' தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் தென்மண்டலக் குழுவிற்கு அனுப்பிட ஏதுவாக ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் துரித நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. சுப்புராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
அனைத்து சிறுபான்மையல்லாத உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் தலைமையாசிரியர்கள்
(ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் வழியாக)

நகல்
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9
கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.